

மங்கலம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் அரியூர் அங்காளம்மன் கோவில் எதிரில் நடைபெற்றது. மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண்.குமரவேல் தலைமை தாங்கினார். தொகுதி செயலாளர் ச.அசோக் (எ) மோதிலால் வரவேற்புரை ஆற்றினார். பொதுக்குழு உறுப்பினர் அ.சோமசுந்தரம், கா.பரமபதம், முருகதாஸ், அவைத் தலைவர் சே.புஷ்பராஜ், துணைச் செயலாளர் க.ஐய்யனார், மகளிர் அணி எம்.புஷ்பலதா, ச.பாக்கியலட்சுமி சாரங்கம், க.கவிதா கன்னியப்பன், பொருளாளர் டி.எம்.எஸ். (எ) வே.தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை ஆற்றினார். இந்த பொதுக்கூட்டத்தில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., கழகப் பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ., ஆகியோர் உரையாற்றினர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி இறையூர் அரசு நிதி உதவி பெறும் அருணா மேல் நிலைப்பள்ளியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் 11ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் ஆசிரியர்கள் உள்ளனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

# நீலகிரி மாவட்டத்தில் 204 இடங்களில் முகாம்கள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

நீலகிரி, ஜூலை 29 -

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி பகுதியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முதற்கட்ட சிறப்பு முகாமினை, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சி பகுதியில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மிசின்ஹில், அரசு உதவி பெறும் சி.எஸ்.ஐ. நடுநிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முதற்கட்ட சிறப்பு முகாமினை, சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் சா.ப.அம்ரித் முன்னிலை வகித்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

நீலகிரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முதற்கட்ட சிறப்பு முகாம் 204 இடங்களில் 24.07.2023 அன்று தொடங்கப்பட்டு 04.08.2023 அன்று வரை நடைபெறுகிறது. இம்முகாம்களில் பொதுமக்கள் எந்தவித சிரமமுமின்றி வந்து விண்ணப்பம் பதிவு செய்யும் வகையில், காலை 30 விண்ணப்பங்களும், மாலையில் 30 விண்ண ப்பங்களும் பெறப்பட்டு வருகின்றது.

மேலும், இன்றைய தினம் குன்னூர் நகராட்சிக் குட்பட்ட மிசின்ஹில் அரசு உதவி பெறும் சி.எஸ்.ஐ நடுநிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முதற்கட்ட சிறப்பு முகாம் ஆய்வு செய்யப்பட்டு, பொது மக்கள் வழங்கும் அனைத்து விண்ணப்பங்களும் தமிழக அரசு தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றி பதிவு செய்ய வேண்டும் எனவும், பொதுமக்களுக்கு விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்வதில் சந்தேகம் இருந்தால் அவர்களுக்கு முழுமையாக படிவங்களை நிரப்ப உதவி செய்திட வேண்டும் என முகாமில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் இரண்டாம் கட்ட முகாமானது 05.08.2023 முதல் 16.08.2023 வரை நடைபெறவுள்ளது. அதற்கான பணிகள்மாவட்ட நிர்வாகத்தின் மூலம் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இம்முகாமில், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், குன்னூர் வட்டாட்சியர் திரு.கனிசுந்தரம், இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் மற்றும் முகாம் அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

### சண்.குமரவேல் தலைமை! ச.அசோக் (எ) மோதிலால் வரவேற்புரை!

# மங்கலம் தொகுதியில் கலைஞர் நூற்றாண்டுப் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - இரா.சிவா சிறப்புரை!

புதுச்சேரி, ஜூலை 29 -

புதுச்சேரி மங்கலம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும்பொதுக்கூட்டம் அரியூர் அங்காளம்மன் கோவில் எதிரில் நடைபெற்றது. மாநில தலைமைச் செயற்குழுஉறுப்பினர்சண்.குமரவேல்தலைமைதாங்கினார். தொகுதி செயலாளர் ச. அசோக் (எ) மோதிலால் வரவேற்புரை ஆற்றினார். பொதுக்குழுஉறுப்பினர்அ. சோமசுந்தரம், கா. பரமபதம், முருகதாஸ், அவைத்தலைவர் சே. புஷ்பராஜ், துணைச்செயலாளர் க. ஐய்யனார், மகளிர் அணி எம். புஷ்பலதா, ச. பாக்கியலட்சுமிசாரங்கம்,க.கவிதாகண்ணியப்பன், பொருளாளர் டி.எம்.எஸ். (எ) வே. தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தி.மு.க. கொள்கைப் பரப்புச் செயலாளர்,தமிழ்நாடுபாடநூல் கழகத்தலைவர்திண்டுக்கல் ஐ.லியோனிசிறப்புரை ஆற்றினார்.

அப்போது, பிரதமர் மோடிஉளுந்தேஇல்லாமல் ஆயிரம் வடை சுடக் கூடிய டுபாக்கூர்.இவர்தமிழ்நாட்டில் தமிழக மக்களை தன்வசம் இருப்பதற்காக திருக்குறளை வாசிக்கிறார். மோடியின் இந்த செயல் தமிழ்நாட்டில் நடக்காது. இதேபோன்று ஆளுநர் ரவியும் செய்து வருகிறார். புதுச்சேரி ஆளுநரின் தலையாட்டிப் பொம்மையாக ரங்கசாமி உள்ளார். ஆனால் தமிழ்நாடு முதல்வர் இவரை போல் இல்லாமல் தன்மானம் மிக்கவராக உள்ளார். கடந்த 9 ஆண்டுகளாக நாட்டை பா.ஜ.க. நாசமாக்கி விட்டது. என்.டி.ஏ. கூட்டணி துரோகிகளின் கூட்டணி. இதற்கு மோடி தான் தலைவர். இந்தியா கூட்டணி நாடு முழுவதும் ஆட்சி அமைக்கும். அண்ணாமலையை கர்நாடகாவில் விரட்டி அடித்தது போல் தமிழ்நாட்டிலும் விரட்டியடிப்பார்கள்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி பெண்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைக் காப்பாற்றுவது பெண்கள்தான். புதுச்சேரியிலும் உதயசூரியன் ஆட்சி அமைத்து திராவிடமாடல்ஆட்சிநடக்கும். தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ்ப் பெண்மணி புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தமிழ்நாடு பாடநூலை நீக்கிவிட்டு சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தை அமல்படுத்திதுரோகம்செய்துள்ளார்.இவர்ஒரு தமிழினத் துரோகி. இந்த துரோகத்துக்குமுடிவுகட்ட புதுச்சேரியில்தி.மு.க.ஆட்சி அமைய வேண்டும். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு40வெற்றிபெற்றுஇந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும்.

இவ்வாறு திண்டுக்கல் லியோனி பேசினார்.

**இரா.சிவா பேச்சு!**

முன்னதாக புதுச்சேரி மாநிலதி.மு.க.அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா பேசும்போது,

புதுச்சேரியில் மிக மோசமான பாவப்பட்ட ஆட்சி நடைபெற்று வருகிறது. மக்களை ஏமாற்றக் கூட கூடிய செயல்களை செய்ய வேண்டாம். தமிழகத்தில் 6 முதல் 12ம். வகுப்பு வரை அரசு பள்ளி படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவ படிப்பில் 7.5% உள்ஒதுக்கீடுவழங்கப்பட்டு வருகிறது. ஆனால் புதுச்சேரியில் ஒன்றாம் வகுப்பு 10ம் வகுப்பு வரை அரசுபள்ளிபடிக்கும்மாணவர்களுக்குதான்மருத்துவக் கல்லூரியில் 10% இடம் ஒதுக்கி வழங்கப்படும் என கூறுகிறார். இதற்காக நாங்கள் இன்னொரு குழந்தையைபெற்றுக்கொண்டா படிக்க வைக்க முடியும்.

இவ்வாறு இரா.சிவா பேசினார்.

தொடர்ந்துஏழை,எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.இந்தபொதுக்கூட்டத்தில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர்வி.அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., கழகப்பொருளாளர்இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ.,ஆகியோர்பேசினர்.

இதில்,துணைஅமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள்சட்டமன்றஉறுப்பினர்பூ.மூர்த்தி, கே.எம்.பி. லோகை யன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப.காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறு ப் பினர்கள் வெ.ராமசாமி, ப.செல்வநாதன், எஸ். தர்மராஜன், பா.செ.சக்திவேல், ந.தங்கவேலு, சி. கோபால், வே. கார்த்திகேயன், பெ. வேலவன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி.செந்தில்வேலன், ப. இளம்பரிதி, பெ.பழநி, மு. பிரபாகரன், மற்றும்கிளைச் செயலாளர்கள்,நிர்வாகிகள் பங்கேற்றார்கள்.

கூட்டத்தின்முடிவில்அரியூர். பா. ஏழுமலை நன்றியுரை ஆற்றினார்.




விருதுநகர் தொழில் வர்த்தக சங்க மஹாலில், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை சார்பில், மாவட்ட தொழில் மையம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி கழகம் (தாட்கோ), வாழ்ந்து காட்டுவோம் திட்டம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்டம் முன்னோடி வங்கி மற்றும் அனைத்து வங்கிகள் இணைந்து நடத்திய "கடன் வசதி எளிமையாக்கல் இயக்கம்" சிறப்பு முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் துவக்கி வைத்து, 915 தொழில் முனைவோர்களுக்கு, ரூ.114.51 கோடி மதிப்பிலான, மானியத்துடன் கூடிய கடனுதவிக்கான அனுமதி ஆணைகள் மற்றும் காசோலைகளை வழங்கினார்.

### நாளை நடைபெறுகிறது!

# சிவகங்கை மாவட்டத்தில் பாக முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, ஜூலை 29 -

சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமானகேஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ள தாவது. நாளை (30.7.2023 - ஞாயிற்றுக் கிழமை) மற்றும் ஆகஸ்டு 3ம்தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான பி.எல்.ஏ. 2 பாக முகவர்கள் கூட்டம் கீழ்க் கண்டவாறு நடைபெற உள்ளது. எனவே அங்கீகரிக்கப் பட்ட பாகமுகவர்கள் தவறாது இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் . அவர்களை அழைத்துவருவதற்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் இடங்கள்.

1. நாள் 30. 7. 2023 ஞாயிற்றுக் கிழமை, காலை 10 மணி - சிவகங்கை சட்டமன்றத் தொகுதி, இடம் .ஏ.எம்.கே.மகால், திருப்பத்தூர் சாலை, சிவகங்கை,

2. மானாமதுரை - நேரம் மாலை 4.00மணி - மானாமதுரை சட்டமன்ற தொகுதி. இடம். அனுசயா மஹால், நகராட்சி அலுவலகம் எதிர்புறம், மானாமதுரை, தேதி 3.8.2023. வியாழக்கிழமை .

3.காரைக்குடி சட்டமன்றத் தொகுதி. நேரம். காலை 10 மணி இடம். அபூர்வ திருமண மண்டபம், காரைக்குடி.

4.திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, நேரம் மாலை 4.00மணி , இடம். செந்தாமணி மஹால் புதுக்கோட்டை சாலை, திருப்பத்தூர், அங்கீகரிக்கப் பட்ட பாக முகவர்கள் மட்டும் தவறாது கலந்து கொண்டு கூட்டத்தில் வழங்கப்படும் ஆலோசனைகளை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன் .

மேலும் வருகிற ஆகஸ்ட் 16ஆம் தேதி ராமநாதபுரத்தில் நடைபெறும் பாகமுகவர்கள் கூட்டத்தில் கழக தலைவரும் முதல்வருமான தளபதி அவர்கள் 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பாகமுகவர்களின் தேர்தல் பணி குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

எனவே இந்த கூட்டம் மிகவும் முக்கியமானதாகும். அனைத்து பாகமுகவர்களும் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் தெரிவித்து உள்ளார்.

### சிவகங்கை மாவட்டம் – இடைக்காட்டூர் – புதுவயலில்

# கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம் - நல உதவிகள் வழங்கல்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - கம்பம் செல்வேந்திரன் - மு.தென்னவன் - தமிழரசி சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 29 -

சிவகங்கை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாளினை முன்னிட்டு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பொதுக் கூட்டங்கள், மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டு வருகிறது . இதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை சார்பில் மானாமதுரை தாலுகா இடைக்காட்டூரில் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை அமைப்பாளரும், இடைக்காட்டூர் ஊராட்சி மன்ற தலைவருமான ஆ.மு. சண்முகநாதன் தலைமையில் மாவட்டத் தலைவர் டி.திருநாவுக்கரசு, மாவட்ட துணைத் தலைவர் காரை. சுரேஷ்,மாவட்ட துணை அமைப்பாளர்கள் குரு. போஸ், பெ.ராஜேந்திரன், ஆபிரகாம், செல்வகுமார், பா.சுரேஷ்குமார், ஆர். ராதிகா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முன்னாள் எம்.எல்.ஏ எஸ். மாரியப்பன் கென்னடி வரவேற்று பேசினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன், மாநில தேர்தல் பணி குழுச் செயலாளரும் முன்னாள் எம்.பியுமான கம்பம் பெ.செல்வேந் திரன், மாநில இலக்கிய அணி புரவலர் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பொதுக்கூட்டத்தில் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர் கே.எஸ்.எம். மணிமுத்து, ஒன்றியக் குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, துணைத்தலைவர் முத்துசாமி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் துரை.ராஜாமணி ம.அண்ணாதுரை மானாமதுரை நகர் கழகச் செயலாளர் க.பொன்னுச்சாமி, பொதுக் குழு உறுப்பினர்கள் ஏ.ஆர். ஜெயமூர்த்தி, கு.ராசாங்கம், மானாமதுரை நகரமன்ற துணைத்தலைவர் சே.பாலசுந்தரம், இளைஞர் அணி அழகுசுந்தரம், மாரிக்கண்ணன், தொண்டரணி மூர்த்தி, மகளிர் அணி சண்முகப்பிரியா, ஒன்றிய நிர்வாகிகள் சோனை முத்து, தனசேகரன், நாகராஜ்,ஈஸ்வரி தர்மராஜ்,எஸ்.பாலகிருஷ்ணன்,நீ. மணி, சீ. காளியப்பன், சமயமுத்து, மாரி, நாசர், சிக்கந்தர், பன்னீர்செல்வம், செல்வகுமார் ஆர். சுப்பிரமணி, சீமைச்சாமி, முத்துமணி, வெங்கட், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் புதூர் கண்ணன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் உட்பட ஒன்றிய ஊராட்சிக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .

நிகழ்ச்சியில் 1000க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் மு .தென்னவன் ஆகியோர் வழங்கினார்கள்.

இடைக்காட்டூர் கிளை செயலாளர் முகமது நாசர் நன்றி கூறினார். முன்னதாக அபி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட கலை இலக்கிய பேரவை பகுத்தறிவு மாவட்ட அமைப்பாளர் சண்முகநாதன் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

புதுவயல் சாக்கோட்டை கிழக்கு ஒன்றியக்கழகம் சார்பில் புதுவயலில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒன்றிய செயலாளர் சுப. சின்னதுரை தலைமையில் பேரூர் கழக செயலாளர்கள் பகுருதீன்அலிபாய், செ.பிரமையா, அம்பாள்முகமது மீரா,சங்கீதா செல்லப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தபொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் மாநில தேர்தல் பணிக் குழு செயலாளரும் முன்னாள் எம்.பி.யுமான கம்பம் பெ.செல்வேந்திரன், மாநில இலக்கிய அணி புரவலரும் முன்னாள் அமைச்சருமான மு.தென்னவன் தலைமை கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். முத்து துரை ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள் .

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், ஒன்றிய நிர்வாகிகள் சத்யராஜா, வே.சேது கொக்கி குமார், பூக்குடி ஆறுமுகம், சுப்பையா, ரா. குணசேகரன், வீரப்பன், சின்னையா, கணேசன் சூர்யா அழகேசன், அயூப் கான், முருகேசன், வீ.ஆர். குணசேகரன், உமா மகேஸ்வரி, ஒன்றிய கவுன்சிலர் ரேவதிசின்னதுரை, மகளிர் அணி திவ்யாகண்ணன் , ஜெயந்தி பிரவீன், மணிகண்டன், கோபாலகிருஸ்ணன், திருப்பதி தாஸ், சின்னையா கணேசன், சூர்யா, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், புதூர் கண்ணன், மற்றும் ஒன்றிய ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி ஏற்பாடுகளை சாக்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் சுப. சின்னத்துரை தலைமையில் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள். பொதுக்கூட்டத்தில் 2000த்திற்கும் மேற்பட்ட மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் ஆகியோர் வழங்கினார்கள்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், கீழ் கோத்தகிரி, கோடநாடு கேரடாமட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். உடன் அரசு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பலர் உள்ளார்.